21st August 1961]

SRI T. S. RAMASWAMI : The latest census figures show that the rate of increase of population in our State is the lowest when compared to the other States in India. May I know whether this is due to our propaganda or any other reasons?

THE HON. SRI M. A. MANICKAVELU : The effect of our propaganda could not have reflected on the latest census figures. But, surely, its effect will be felt later on. I think the lowest birth-rate in this State is due to-what shall I say-Tamilians' culture, tradition and all those things.

SRI A. V. P. ASAITHAMBI : இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மந்திரி சபையில் உள்ளவர்கள் அனுஷ்டித்து வருகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கொஞ்சம் பிரயாசை எடுத்துக்கொண்டு, இதைப்பற்றி கணக்கு எடுத்துப் பார்த்தால் விவரம் தெரிய வரும். (சிரிப்பு.)

SRI A. VEDARATHNAM : இந்த குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை கிருஸ்தவர்கள் மனதினால்கூட நினைக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். நான் தேர்தலுக்கு நின்ற சமயத்தில் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் நீங்கள் பங்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று என்னிடம் கிருஸ்தவர்கள் வாக் குறுதி கேட்டார்கள். முஸ்லீம்கள் குரானைக் காரணம் காட்டி ஹராம் என்கிறார்கள். இப்பொழுது இந்த திட்டம் இந்து சமுதாயத்தில்தான் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்ற காரணத்தினாலே, இன்னும் கொஞ்ச காலத்திலே இந்து சமுதாயம் மைனாரிட்டியாகப் போய்விடுமோ என்ற பயம் தெரிவிக்கப்படுகிறது. இதை அரசாங்கம் ஆராய்ந்ததா ? அப்படியானால் அதன்பேரில் இந்தத் திட்டத்தை புனர் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆரம்ப காலத்திலே கிருஸ்தவர்களிடமிருந்து, அதிலும் குறிப்பாக கத்தோலியர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தது. முஸ்லீம்களிடமிருந்தும் எதிர்ப்பு வந்தது. ஆனால் இப்பொழுது உள்ள நல்ல அனுகூலங்களைப் பார்த்து அவர்களும்கூட ஒப்புக் கொள்ளுகிறார்கள். போப் ஆண்டவர் கூட முதலிலே எதிர்த்தவர், இப் பொழுது சில முறைகளை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

Misappropriation of funds (Tiruturaipundi Block)

* 1297 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி பிளாக்கில் விவசாய இலாகா உத்தியோகஸ் தர்களால் நிதி கையாடல் செய்யப்பட்டது எந்த வருஷத்தில் ?

(இ) இதுவரை அதன் பேரில் முடிவு செய்யாது காலகரணம் செய்வ தன் காரண மென்ன ?

(உ) எப்போது இது முடிவடையும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (Defalcation took place during 1956–57 and 1957–58.

(இ) & (உ) Criminal prosecution has been sanctioned against all but one of the officials concerned. The question of sanctioning the prosecution of the remaining persons is under consideration.

SRI A. VEDARATHNAM : இந்தக் கையாடலைச் செய்தவர்கள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? இவ்வளவு நீண்டகாலமாக ஒன்றும்

செய்யாமல் இருக்கின்ற காரணத்தினாலே இந்த கேஸ் ஒன்றும் இல்லாமல் போய்விட்டதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா ? இம்மாதிரி கையாடல் செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை யென்றால் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் அளித்த விடை கனம் அங்கத்தினர் காதில் விழவில்லை என்று நினைக்கிறேன். கிரிமினல் பிராசிகியூஷன் சாங்ஷன் ஆகியிருக்கிறது. கொஞ்சம் தாமதம் ஆவதற்கு காரணம் கணக்கு எல்லாம் வரவேண்டியிருந்தது. அக்கௌண்டண்ட் ஜெனரல் ஆபீசிலிருந்து தகவல் வரவேண்டியிருந்தது. அது வருவதிலே கொஞ்சம் காலதாமதம் ஆயிற்று. சம்பந்தப்பட்டவர்களிடம் எக்ஸ்பிளனேஷன் கேட்டு பிராசிகியூஷன் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விஷயம் பரிசீலனையிலிருப்பதால் இன்னும் அதிகமாக தகவல் கொடுப்பது முறையல்ல.

Central Jails

* 1298 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய சிறைகளில் விவசாயத்திற்காக யந்திரங்களையும் அதற்கான கருவிகளையும் செய்வதற்கான தொழிற்சாலைகளை ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(இ) எந்தெந்த தொழிற்சாலைகள் எந்தெந்த சிறைகளில் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(அ) No, Sir.

(இ) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : மத்தியச் சிறைச்சாலைகளிலே குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை அடைந்தவர்களுக்கு ஒரு தொழில் நுட்ப பயிற்சி அவர்களுக்கு அளிக்க வேண்டியதாய் இருப்பதினால் விவசாயிகளுக்கு வேண்டிய இயந்திரங்களை தயார் செய்வதை முன்னிட்டாவது, ஒன்றிரண்டு மத்திய சிறைச்சாலைகளில் இது போன்ற தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வது நல்லது என்று கனம் அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ? இனிமேலாவது அந்த மாதிரி ஆரம்பிப்பதற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவிப்பவர்களுக்கு தொழில் கற்றுக்கொடுக்க வேண்டியதன் நோக்கம், சிறையைவிட்டு வெளியே வந்த பிறகு அவர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபடவேண்டும் என்பதற்காகத்தான். அப்படிப் பார்க்கும் பொழுது, ஒரு குறிப்பிட்ட தொழிலிலே பயிற்சி பெறுகின்றவர்கள் அதை நடத்த முடியாமலிருக்கலாம். இப்பொழுது கீழ்க்கண்ட தொழில்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

Tailoring, aluminium and blacksmithy work, spinning and weaving, boot making, carpentary, book-binding, handmade paper-making, composing in printing press, gardening, cooking, etc.

Pamani-Kallimedu road.

* 1299 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலுக்கா பாமணி-கள்ளிமேடு ரஸ்தாவுக்குக் கப்பி போடத் திட்டமுண்டா ?